4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

121. பெருங்களத்தூர், ஸ்டாண்டர்டு மோட்டார் பிராடக்ட்ஸ் ஆப் இந்தியா நிறுவனத்தினரால் செலுத்த வேண்டியுள்ள வரித் தொகையை 5 வருடத்திற்கு தள்ளிப்போடுவது குறித்து, வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 28—1—1993-ம் நாளிட்ட 29 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

122. சென்னை—79, திருவாளர்கள் பலராமகிருஷ்ணா பிளவர் மில்ஸ் அவர்களால் செலுத்த வேண்டிய வரித்தொகையை தள்ளிப்போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 28—5—1993 ஆம் நாளிட்ட 37 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

123. மதுரை, திருவாளர்கள் மதுரை வெடிமருந்துகள் நிறுவனத்தினரால் செலுத்த வேண்டிய விற்பனை நிலுவையினை தள்ளுபடி செய்வது குறித்து, வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 10—3—1993 ஆம் நாளிட்ட 79 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 54(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

124. சென்னை, திருவாளர்கள் கண் ஆராய்ச்சி மையம் வாங்கியுள்ள சொகுசு பேருந்திற்கு உள்நுழை வரிவிதிப்பிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 20—5—1993 ஆம் நாளிட்ட 138 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

125. வணிகவரித் துறை அலுவலர்கள் தங்களின் ஆளுகைக்குட்பட்ட இடங்களில் உள்ள உணவகங்கள் மற்றும் தங்குமிடங்களில் தன்னிச்சையாக சோதனை நடத்துவதற்கு அதிகாரம் வழங்குவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 26—5—1993 ஆம் நாளிட்ட 153 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1981

1993 டிசம்பர் 30]

ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் மற்றும் தங்குமிடங்கள் மீதான சொகுசு வரிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் (6/1981) 21(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

126. சென்னை—1, திருவாளர்கள் கணேஷ் ராம் நிறுவனத்தினரால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி, தண்டத் தீர்வை மற்றும் மேல் வரியினை தள்ளுபடி செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 21—7—1993—ஆம் நாளிட்ட 254 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959—ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

127. சென்னை, போரூர் மெட்டல் ஒர்க்ஸ் நிறுவனத்தினரால் செலுத்தப்பட வேண்டிய வரி நிலுவைத் தொகையை தள்ளிப்போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 21—7—1993 ஆம் நாளிட்ட 245 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

128. தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியத் தலைவரை மேலும் ஓராண்டுக் காலத்திற்கு மறு நியமனம் செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 6—8—1993 ஆம் நாளிட்ட 689 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெறறது].

129. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய நிர்வாக விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 13—4—1993—ம் நாளிட்ட 295 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

130. 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய சேமநலநிதி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 15—4—1993—ம் நாளிட்ட 301 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[1993 டிசம்பர் 30

131. மின்கல சக்தியினால் இயங்கும் ஐந்து சிறிய பயணிகள் பேருந்துகளுக்காக திருவாளர்கள் சேரன் போக்குவரத்துக் கழக லிமிடெட் செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து உள்துறை (போ. 1) துறையின் 3—8—1993 ஆம் நாளிட்ட 1/189 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

132. 1—3—1988 ஆம் நாளன்று வெளியிடப்பட்ட வேளாண்மைத்துறையின் II (2)/ஏஜி/1419/88 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறை (ஏ.எம். II) துறையின் 10—8—1993 ஆம் நாளிட்ட 496 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4) (சி) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

133. ஒரு நட்சத்திர, இரண்டு நட்சத்திர மற்றும் மூன்று நட்சத்திர ஓட்டல்களில் தங்கும் வசதிக்காக செலுத்தப்பட வேண்டிய வரியினை 50 சதவீதமாகக் குறைப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 21—9—1993 ஆம் நாளிட்ட 327 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1981 ஆம் ஆண்டு உணவகங்கள் மற்றும் தங்குமிடங்கள் மீதான சொகுசு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

134. வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையினரால் வெளியிடப்பட்ட 23—4—1993 ஆம் நாளிட்ட II(1) வ.வ.ச.அ./64 (அ)/93 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்வது குறித்த வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 26—7—1993 ஆம் நாளிட்ட 251 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

135. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து நிறுவனங்களின் பொது மேலாளர்களை 'எஸ்டேட் அலுவலர்களாக' பணி அமர்த்துவது குறித்து, வருவாய்த்துறையின் 26—7—1993 ஆம் நாளிட்ட 689 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வளாகங்கள் (அனுமதியின்றி குடியிருப்போரை அகற்றுதல்) சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 1/1976) 20(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

1993 டிசம்பர் 30]

136. தமிழ்நாடு பட்டா பாஸ் புத்தகத் திட்டத்தினை ஆறு மாவட்டங்களில் அமல்படுத்துவது குறித்து, வருவாய்த்துறையின் 23—3—1993 ஆம் நாளிட்ட 249 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு பட்டா பாஸ் புத்தகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1986) 22(3) ஆம் பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

137. 1983 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்த விற்பனைக்கு வழங்குதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறையின் 18—2—1993 ஆம் நாளிட்ட 39 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

138. உள்துறையினரால் வெளியிடப்பட்ட 15—5—1991 ஆம் நாளிட்ட எஸ். ஆர். ஓ. II (2)/எசிஓ/2507/91 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 29—9—1993 ஆம் நாளிட்ட 769 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

139. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப் படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (சி. II) துறையின் 8—9—1993 ஆம் நாளிட்ட [1357 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

140. 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பயணப்படி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் (பணியாளரமைப்பு—சட்டமன்றம்) துறையின் 4—2—1993 ஆம் நாளிட்ட 124 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்குதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 25(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

141. தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் 1991–92 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை (1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47(1) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

[1993 டிசம்பர் 30

142. 1992–93 ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்வரத்துக் கழகத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

143. 1991–92 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

144. 1991–92–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி–அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

145. 1992–93 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் ஆண்டறிக்கை [1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

34. 1992–93 ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

35. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் இணைப்பு–2–ல் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிறுவனங்கள் பட்டியலில் ''புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகத்தினை'' சேர்ப்பது குறித்து 23—11—1993 ஆம் நாளிட்ட சட்டமன்றப் பேரவைச் செயலக கடிதம் எண். 26041/93–1, ச.ம.பே.செ. (ச.மு.வ. 3) கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.